சிவபெருமானின் வீரட்ட தலங்கள்

இரா. இராமகிருட்டிணன்

நர்மதா

Copyrighted material

உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமலும் இருக்க:

* நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
* அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)
* எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)
* சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)
* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
* உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
* மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
* புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
* பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

இந்த இனிய,
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும்
தங்கள்
அன்புள்ள ,

Copyrighted material

சிவ பெருமானின் வீரட்டதலங்கள்

'நவக்கிரகங்களின் ஆட்சி முறையும்
மானுட விதியும்' நூலாசிரியர்

இரா. இராமகிருட்டிணன்

எம்.ஏ., எம்.ஃபில்.,

நர்மதா

நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நானா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி.நகர்,சென்னை - 600 017. தொலைபேசி: 24334397
செல்லிடபேசி: 98402 26661, தொலைநகல்: 2433 6312

Copyrighted material

வாசகர்களுக்கு

நல்ல நூல்களுக்காகத் தரப்படும் தொகை செலவல்ல, மூலதனம்! நமது சிறப்பான எதிர்கால வாழ்வுக்காகத் தரப்படும் Investment! ஐம்பது ரூபாய் புத்தகத்தில் ஆயுட்கால வாழ்க்கைக்கான யோசனைகள் நிறைந் திருக்கும்.

☐பொழுதுபோக்கு, கேளிக்கைகளுக்காகச் செலவிடப்படும் தொகையில் சிறு பகுதியையாவது பயன் தரும் புத்தகங் களுக்காகச் செலவிடுங்கள். மிகுந்த நன்மை பெறுவீர்கள்!

☐ எங்களது இலவச விலைப்பட்டியலைப் பெற 50 காசு அஞ்சலட்டை மட்டும் எழுதுங்கள். உடன் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

☐ தமிழகத்தின் எல்லா பிரபல புத்தகக் கடைகளிலும் நர்மதா நூல்கள் கிடைக்கின்றன. அவர்களிடமிருந்து (தபால் செலவின்றி) பெறலாம். தபாலில் அனுப்புவதற்கான கட்டணம் அதிகமாக உள்ள நிலையில் தங்கள் ஊர்ப் புத்தகக் கடையிலேயே பெறலாம். அவர்களையும் நல்ல நூல்கள் விற்க ஊக்குவிக்கலாம்!

எங்களது இமெயில் முகவரி : narmadhamail@yahoo.co.in
எங்களது இணைய தளம் : www.newbooklands.com

Pages: 144

Price: Rs.60.00

Paper used 13.6 kg. SPB N.S

☐ Sivaperumanin Veeratta Thalangal - The eight shrines of Lord Shiva narrated in Tamil by R.Ramakrishnan, M.A., M.Phil. ☐ This Edition: June 2010 ☐ Published by: T.S.Raamalingam Narmadha Pathipagam, Chennai - 600 017 ☐ D.T.P. Execution by: M/s. Sri Vigneshwara Graphics, Chennai - 600 017 ☐ Printed at: M/s. Malar Printers, Chennai - 600 034 ☐

Copyrighted material

ஆசிரியர் பற்றி...



இந்நூலாசிரியர் திரு. இரா. இராம கிருட்டிணன் 1945-ஆம் ஆண்டில் ஒசூரில் (கிருட்டிணகிரி மாவட்டம்) திரு. மு.இராசு - திருவாட்டி சு.கமலம் மாள் தம்பதியரின் தலைமகனாகப் பிறந்தவர்.

முப்பது ஆண்டுகள் தென்னக இரயில்வேயில் இருப்பூர்தி நிலைய அதிகாரியாகவும், உடன் இரயில்வே துணை நிலை இராணுவப்படையில் அலுவலராகவும் பணியாற்றி நற்சேவைப் பதக்கங்களும், பண முடிப்புகளும் பெற்றவர். தம்முடைய தணியாத தமிழ் இலக்கிய ஆர்வத்தால் தமிழிலக்கியத்தில் முதுகலைப் பட்டமும், ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டமும் பெற்ற இவர் சோதிடவியலில் பட்டயம், கோயிற்கலையில் முதுநிலைப் பட்டயம், உளவியலில் அறிவியல் இளையர் பட்டம் ஆகியவற்றோடு இந்தி மொழியில் ‘இந்தி ரத்னா’ பட்டமும், கன்னட மொழியில் சான்றிதழும் பெற்றவர்.

இவர் எழுதிய ‘ஒசூர் அருள்மிகு சந்திரசூடேசுவரர் திருக்கோயில் வரலாறு’ மற்றும் ‘கலாப்ரியா கவிதைகளில் அகத்திணை மரபுகள்’ என்ற இரு நூல்களும் காவ்யா பதிப்பகத்தால் வெளியிடப்பெற்றன. கோயில் வரலாறுகளில் ஆர்வம்மிக்கவர். ‘நவக்கிரகங்களின் ஆட்சி முறையும், மானுட விதியும்’ என்ற இவரின் நூல் எம் பதிப்பகத்தால் அண்மை யில் வெளியிடப்பெற்றது.

இவர் தற்போது ‘சிவபெருமானின் இறை வடிவங்களும், மானுட வடிவங்களும்’ குறித்தும், ‘தருமபுரி - கிருட்டிணகிரி மாவட்டங்களின் வரலாறும், பண்பாடும்’ குறித்தும் விரிவான ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

This One
LD73-JHO-OR9F
Copyrighted material

எண்பெரும் வீரட்டதலங்களுக்கான பயணக் குறிப்பு

சென்னையில் வசிப்பவர்கள் முதலில் சென்னையிலிருந்து புறப்பட்டு விழுப்புரம் வழியாகத் திருக்கோவலூர் சென்று அங்குக் கீழையூரில் அருள் பொழியும் வீரட்டானேசுவரரை வழிபடவும்.

அடுத்து திருக்கோவலூரிலிருந்து கடலூர் செல்லும் பேருந்தில் ஏறி பண்ருட்டியில் இறங்கவும். பண்ருட்டியிலிருந்து பாலூர் வழியாகக் கடலூர் செல்லும் பேருந்தில் ஏறி 2 கி.மி. தொலைவில் உள்ள 'திருவதிகை' வீரட்டானேசுவரரை வழிபடவும். தூரம் 50 கி.மீ.

பின்னர் திருவதிகைத் தலத்திலிருந்து கடலூர் சென்று, கடலூரிலிருந்து பேருந்து மூலமாக சிதம்பரம், சீர்காழி, வைத்தீசுவரன் கோயில் வழியாகச் சென்று மயிலாடுதுறையில் இறங்கி, அங்கேயே தங்கவும்.

மயிலாடுதுறையிலிருந்து 'கொருக்கை' என்ற ஊருக்கு நகரப் பேருந்து செல்கிறது. 'கொருக்கை' என்ற ஊர்தான் திருக்குறுக்கைத் தலமாகும். எனவே நகரப் பேருந்து மூலமாக திருக்குறுக்கைத் தலத்தையடைந்து இறைவனை வழிபட்டுவிட்டு மீண்டும் மயிலாடுதுறைக்கே வந்து விடவும்.

அடுத்து மயிலாடுதுறையிலிருந்து 'திருக்கடவூர்' திருத்தலத்திற்கு நகரப் பேருந்தில் சென்று தொழுது வரலாம். அடிக்கடி நகரப் பேருந்து வசதி உள்ளது.

திருக்கடவூர் தலத்திலிருந்து மயிலாடுதுறைக்குத் திரும்பும் வழியில் 'செம்பொனார் கோயில்' என்ற ஊரில் கடைத் தெரு நிறுத்தத்தில் இறங்கவும். அங்கிருந்து சிற்றுந்து மூலம் 4 கி.மீ. தூரத்திலுள்ள திருப்பறியலூர் திருத்தலம் சென்று

Copyrighted material

வீரட்டானேசுவரரை வழிபட்டு விட்டு மீண்டும் 'செம்பொனார் கோயில்' வந்து அங்கிருந்து மயிலாடுதுறைக்கு வந்து சேரவும்.

அடுத்து மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்தில் ஏறி சுமார் 7 கி.மீ. தூரத்திலுள்ள 'வழுவூர்' பேருந்து நிறுத்தத்தில் இறங்கவும். இறங்கிய பின்னர் அங்கு எதிரேயுள்ள சாலையில் 2 கி.மீ. தூரம் சென்று அச்சாலை முடிவடையும் இடத்தில் உள்ள 'வழுவூர்' வீரட்டானத்தைத் தரிசிக்கவும். பின்னர் மீண்டும் பேருந்தை விட்டு இறங்கிய இடத்திற்கே வந்து சேரவும்.

அங்கிருந்து பேரளம், பூந்தோட்டம், சன்னாநல்லூர் வழியாகத் திருவாரூர் செல்லும் பேருந்தில் ஏறி 'கங்களாஞ்சேரி' என்ற ஊரில் இறங்கவும். திருவாரூருக்கு 5 கி.மீ. முன்னதாக உள்ள இவ்வூரிலிருந்து 2 கி.மீ. சென்றால் 'திருவிற்குடி' என்ற சாலை பிரியும் இடத்தில் இடதுபுறமாக மேலும் 2 கி.மீ. தூரம் சென்று 'திருவிற்குடி' வீரட்டானேசுவரரை வழிபடலாம். திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாகவும், திருவிற்குடி வழியாகவும் திருப்பயற்றூர் என்ற ஊருக்கு நகரப் பேருந்து செல்கிறது. அப்பேருந்தில் சென்றும் திருவிற்குடி தலத்தை அடைந்து வீரட்டானேசுவரரை வழிபடலாம்.

அடுத்து திருவிற்குடியிலிருந்து கங்களாஞ்சேரி வழியாக மயிலாடுதுறை செல்லும் வழியில் பேரளத்தை அடுத்து உள்ள கூட்டுச் சாலையில் (கூட்டு ரோட்) இறங்கவும். அங்கிருந்து கும்பகோணம் வந்து, கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லவும். திருவையாற்றிலிருந்து தஞ்சாவூர் செல்லும் பேருந்தில் ஏறி 2 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கண்டியூர் சென்று வீரட்டானேசுவரரைத் தொழவும்.

பின்னர் திருக்கண்டியூரிலிருந்து திருவையாறு வழியே கும்பகோணம் சென்று அங்கிருந்து சென்னை வந்து சேரலாம்.

பக்க எண் 143-இல் உள்ள எண்பெரும் வீரட்டதலங்கள் அமைந்துள்ள இடங்கள் குறித்த வரைபடம் பயணத்திற்கு உதவியாய் இருக்கும்.

□ □ □

Copyrighted material

உட்பொதிவு

எண்பெரும் வீரட்டதலங்கள் 09

1. திருக்கண்டியூர் 13
2. திருக்கடவூர் 24
3. திருவதிகை 43
4. திருவழுவூர் 63
5. திருப்பறியலூர் 84
6. திருக்கோவலூர் 95
7. திருக்குறுக்கை 109
8. திருவிற்குடி 125
9. பிற் சேர்க்கை - 1
   சிவனின் அருளாடல்களைக் காட்டும்
   யட்சகான நாட்டிய நாடகங்கள் 136
10. பிற் சேர்க்கை - 2
    மகுடங்கள், ஆயுதங்கள், முத்திரைகள்,
    ஆசனங்கள் ஆகியவற்றின் விளக்கப்
    படங்கள் 138
11. எண்பெரும் வீரட்டதலங்கள் அமைந்துள்ள
    இடங்கள் குறித்த வரைபடம் 143
12. பார்வைக்கு உரிய நூல்கள் 144

□□□

Copyrighted material

எண்பெரும் வீரட்டதலங்கள்

இப்பரந்த பூவுலகைக் காப்பதற்காகத்தான் சிவபெருமான் தீயசக்திகளுடன் போராடினார். போரில் வெற்றி கொண்ட உற்சாகத்தில் ஆனந்தமாக நடனமாடினார். தன் வெற்றியை அந்த நடனத்தின் மூலம் எட்டுத் திசைகளிலும் பிரகடனப்படுத்தினார்.

கோபாலகிருட்டிண பாரதியார் இத்திருநடனத்தை,

"அஷ்டதிசையும் கிடுகிடென...." என்று பாடியிருக்கிறார்.

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்ற வள்ளுவன் வாக்கை மெய்யாக்கிக் காட்டும் மறக்கருணையே சிவனாரின் வீரச்செயல்கள். ஈரத்தால் பிறந்ததே ஈசனின் வீரமும்.

அன்னை பிள்ளையை அடித்துத் திருத்துவதைப் போல், அப்பனும் தன் குழந்தைகளை அடித்துத் திருத்துகிறான். அன்பின் பின்னணி இங்கே வெள்ளமாய், அருவியாய் பெருக்கெடுக்கிறது. இதனையே 'மறக் கருணை' என்கிறது சமயநெறி. எனவே மறக்கருணை என்பது ஆண்டவன் உயிர்களிடத்தில் வைத்த கருணையால் வழங்கப்படும் அன்புத்தண்டனை எனலாம்.

Copyrighted materia

கூறி நாவினால் உரைக்கும் அன்பர்களைச் சிவ பெருமானுடைய தமர்கள் என்று எண்ணி காலன் தமர்கள் விலகிச் செல்வார்கள். இவ்வீரட்டதலங்கள் தேவாரக் காலத்திற்கு முன்பே சிறப்புற்று இருந்தமையை நால்வர் பாடல்களின் வாயிலாக நாம் அறியலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனும், திருமாலும், நான்முகனும் காண்பதற்கு அரியவனும், தேவர்களுக்கெல்லாம் தலைவனும், எங்கும் நிறைந்த பரம் பொருளாகிய சிவபெருமானின் வீரம் வெளிப்பட்ட தலங்கள் வீரட்டானங்கள் என்று போற்றப்படுகின்றன.

அறவடிவம், மறவடிவம் என்று இறைவன் கருணை இருவகையாக உருவெடுக்கின்றது. அறவடிவில் வெளிப்படுவது அறக்கருணைச் செயல்; மறவடிவில் வெளிப்படுவது மறக்கருணைச் செயல்.

இறைவனால் நிகழ்த்தப்பட்ட மறக்கருணைச் செயல்கள் எட்டு வகையாக நம் முன்னோர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இக்கருத்துக்கள் புராண வரலாறுகள் வாயிலாகவும் உணர்த்தப்படுகின்றன. இறைவனின் வீரச் செயல்களும், மறக்கருணைச் செயல்களும் அவை நிகழ்த்தப்பட்டத் தலங்களோடு இணைத்துக் கூறப்படு கின்றன. இவை வீரம், தானம் என்ற சொற்களால் வெளி வந்தன. இவையே 'வீரட்டானங்கள்' என்று கூறப்படுகின்றன. சிவபெருமானின் அழித்தல் ஆற்றலை இவ்வெட்டு தலங்களும் அருள் வீரமாக, கருணை மறமாகக் கொண்டாடுகின்றன.

இவ்வெண்பெரும் வீரட்டதலங்கள் தஞ்சாவூர், நாகை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ளன.

☐☐☐

Copyrighted material

1
திருக்கண்டியூர்

"வரிந்த வெஞ்சிலை பிடித்து அவுணர்தம் வளநகர்
எரிந்துஅற வெய்தவன் எழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள
அரிந்தவன் ...."

- சம்பந்தர் (1.120.3)

'பூமன் சிரம் கண்டி' என்று முதலில் பேசப்படும் திருக்கண்டியூர் காவிரிக்குத் தென்கரையிலுள்ள பன்னிரண்டாவது தலம். அப்பரடிகள் தமது அடைவு திருத்தாண்டகத்தில் 'காவிரியின் கரைக் கண்டி வீரட்டானம்' எனத் திருக்கண்டியூரை எண்பெரும் வீரட்டதலங்களில் முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கு பூமன் என்னும் பிரம தேவனின் ஒரு தலையைத் துண்டித்து கண்டித்திருக்கிறார் நீலகண்டர். இவ்வரலாற்றை ''ஊரொடு ...... நாடவை தான் அறியும்'' என்று பாடியிருக்கிறார் வாசீகப் பெருந்தகை. தலபுராணத்தைப் பார்த்தே பிரமசிரக் கண்டனம் பற்றிய வரலாற்றை நாம் அறிய முடிகிறது.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் வளம் கொழிக்கும் கரையில் இத்தலம் அமைந்துள்ளதை,

"கழையுலாம் புனல் மல்கு காவிரி மன்னு கண்டியூர்"

Copyrighted material

'காவிரித்தடம் புனல் செய் கண்டியூர்'

'கருமையார் பொழில் சூழுந்தண் வயற் கண்டியூர்'
(3.296.4-8-9)

- எனத் திருஞானசம்பந்தர் இதன் இயற்கை வளத்தைத் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வீரட்டதலங்களில் ஒன்றான இத்தலம் தஞ்சாவூரிலிருந்து திருவையாறு செல்லும் பேருந்துச் சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தலத்திற்குப் பேருந்து வசதி உள்ளது.

தலச்சிறப்பு

பிரமன் சிரத்தை இறைவன் தம் சூலத்தால் கண்டனம் செய்த காரணத்தால் கண்டனபுரம் - கண்டியூர் எனப் பெயர் பெற்றது. சதாதப முனிவருக்காக இறைவனால் வில்வமரம் கயிலையிலிருந்து கொண்டுவரப்பட்டதால், இத்தலத்திற்கு 'ஆதிவில்வாரண்யம்' என்றும் பெயர். ஆணவம் அகன்ற பிரமன் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டு அருள் பெற்றதால் இத்தலம் 'பிரமபுரி' என்றும் வழங்குகிறது. சூரியன் வழிபட்ட தலம்; திருவையாற்றை மைய மாகக் கொண்ட ஏழு தலங்களில் ஒன்று. எனவே இங்கு ஏழு தலங் களிலுள்ள இலிங்கத் திருவுருவங் களும் உள்ளன.

மாசி மாதத்தில் 13, 14 மற்றும் 15-ஆம் நாட்களில் மாலைப் பொழுதில் 5.45 முதல் 6.10 மணி

Copyrighted material

வரை சூரிய ஒளி இறைவன் மீது படும் சிறப்புடையது. அருணகிரிநாதர் பாடல் பெற்ற தலம்.

புராணப் பெருமை

இத்தலத்தில் சதாதபர் என்ற முனிவர் வாழ்ந்து வந்தார். இம்முனிவர் பிரதோஷத்தில் காளத்தி சென்று இறைவனை வழிபட்டு வந்தார். ஒருமுறை கண்டியூர் வந்தபோது காளத்திக்குத் தக்க நேரத்தில் செல்ல முடியவில்லை. அப்போது இறைவன் அவருக்குத் காளத்தி தரிசனத்தை இத்தலத்திலேயே காட்டி அருளினார் என்பது வரலாறு.

அரியும், அயனும் தாம் தாம் முழு முதற் கடவுள் எனத் தம்முள் வாதிட்டுப் போரிட, அதை விலக்க இறைவன் அடிமுடியில்லாத சோதியாய் விண்ணில் தோன்றினார். அத்தோற்றத்தை- ஒளிப் பிழம்பைக் கண்டு திருமால் கை கூப்பித் தொழுதார். பிரமன் தனது அகந்தை காரணமாக அவ்வொளிப் பிழம்பைக் கண்டு வணங்காமல், தன் உச்சியில் உள்ள ஐந்தாவது தலையால் சிவபெருமானை இகழ்ந்தான்.

பிரமனின் செருக்கை அடக்க உளங் கொண்ட சிவபெருமான், நீல நிறம்

Copyrighted material

பொருந்திய ஒளி விளங்கும் மேனியும், சிலம்புகள் ஒலிக்கும் திருவடியும், நஞ்சைக் கக்கும் செந்நிறப் பாம்பை அரைஞாணாகக் கட்டிய இடையும், பல கோடி தலைகளால் ஆன மாலைகள் கொண்ட மார்பும், சூலம், பரசு, உடுக்கை ஏந்திய கைகளும், மூன்று கண்களும், இளம்பிறை போன்ற கோரைப் பற்களும், அக்கினி மயமான செவ்வானம் போன்ற சிவந்த சடையும், கோபச் சிரிப்பும் கொண்ட பைரவரைத் தோற்றுவித்து, தன்னை இகழ்ந்த பிரமனின் ஐந்தாவது தலையைக் கொய்து வருமாறு பணிக்கிறார்.

பைரவர் இறைவனின் ஆணைப்படி தாமரையான் தலையைக் கொய்தார். இச்செயல் சிவபெருமானின் செயலாகக் கொள்ளப்படுகிறது.

ஆதியில் சிவனைப் போலவே பிரமனுக்கும் ஐந்து முகங்கள் இருந்தனவாம். இதனால் உமாதேவி உட்படப் பலரும் ஆள் மாறாட்டம் செய்து கொண்டனர் என்பதற்காகவே பிரமனது தலையொன்றைப் பசுபதி வாங்கிவிட்டானாம் எனவும் கூறப்படுகிறது.

சமயப் பெருமை

இறைவனின் இப்பேராற்றலை உணர்த்தும் இச்செயலைத் தேவார மூவரும் வியந்து போற்றுகின்றனர்.

எண்பெரும் வீரச்செயல்களில் ஒன்றான இதைத் திருஞானசம்பந்தர் இருபத்தொன்பது இடங்களிலும், திருநாவுக்கரசர் முப்பத்தைந்து இடங்களிலும், சுந்தரர் ஐந்து இடங்களிலும், மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் நான்கு இடங்களிலும், திருக்கோவையாரில் இரண்டு இடங்களிலும் இசைத்துள்ளனர். அயன் தலையை அரிந்ததை அப்பர் பெருமான் அதிக அளவில் போற்றியுள்ளார்.

Copyrighted material

தான் கண்டனம் செய்த அயனுக்கு இப்படி அழகிய சிலை வடிவில் தனது திருக்கோயிலிலேயே இடந்தந்து நல்ல பெயரும் வாங்கித் தருகிறார் கண்டியூர் வீரட்டேசுவரர். மேலும் மற்ற வீரட்டதலங்களில் தனது வீரத்தை வெளிப்படுத்தும் திருவடிவங்களைக் கொண்டவர் இங்கு மட்டும் தனக்கு அத்தகைய வீரத்திருவடிவம் எதையும் கொள்ளவில்லை.

பிரமன் சிரம் கொய்வதற்காக இறைவன் மேற் கொண்ட வடுகக் கோலம் இறைவன் திருமுன்னுக் கெதிரில், இடப்பால் வாயிலில் சுவரையொட்டிக் கதவோரமாக சிறிய சிலை வடிவமாக உள்ளது.

"பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்"

- *கந்தபுராணம்*

ஏனைய வீரட்டதலங்களில் சம்கார மூர்த்தியின் செப்பு வடிவமும், அதற்கெனத் தனியான திருமுன்னும் உள்ளன. இங்கு தான் சம்கார மூர்த்தியின் செப்புத்திருமேனி இல்லை.

இலக்கியங்களில் பிரம்மசிரச்சேதர்

மாணிக்கவாசகர் திருவாசகத்தில், 'நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை ஒல்லை அரிந்து' எனவும், 'அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி' எனவும், திருக்கோவையாரில், 'அன்று கிரால் சிரம் அங்கயனைச் செற்றோன்' எனவும் இவ்வடிவினைக் குறிக்கிறார்.

'அறுத்தானை அயன் தலைகள் ஐந்தில் ஒன்றை'

- *என அப்பரும்*

Copyrighted material

'அந்தணன் தாமரை மலர்ப் பிரமனை நடுத்தலை அரிந்தும்'
- *என அருணகிரியாரும்,*

'ஐம்முகத் தயனை நான்முகம் ஆக்கினை'
- என முருகதாச சுவாமிகளும்

பிரமனின் தலைகளிளொன்றினைக் கொய்த இத் திருவடிவினைப் போற்றுகின்றனர்.

பிரம்மசிரச்சேதர் - பைரவர் திருவுருவ அமைதி

'பைரவர்' என்ற இச்சொல் 'அச்சுறுத்தும் போர்க்குரல் உடையவர்' என்னும் நேர்ப்பொருள் கொண்டது. ஸ்ரீ தத்துவ நிதி மற்றும் சில்பரத்தினம் ஆகிய நூல்கள் இவரை வெண்ணிறத்தவர்; நாற்கரத்தர்; வலக்கரங்களில் - வச்சிரமும், கைக்கோடாரியும், இடக்கரங்களில்- பிரம்ம கபாலமும், சூலமும் கொண்டவர். சுருட்டி உயர்த்திய தலைமுடி; புலித்தோலாடை; தோடு ஒரு புறம், மகரக்குழை ஒரு புறம் கொண்ட திருச்செவியராய்த் திகழ்ந்து அருள் தருவார் என இவரைப் புகழ்கிறது.

சிவ லீலா மூர்த்தங்களில் இவர் ஒருவர். அயனின் செருக்கை அடக்க அவனது ஐந்து சிரங்களில் உச்சித் தலையைக் கொய்தவர்(வராக புராணம்).

இதனால் தொடர்ந்த பிரமஹத்தி விளைவாக எழுந்த கருமை நிறப் பயங்கர உரு தன்னைப் பின்தொடர்ந்திடப் பன்னீராண்டுகள் பாரினை வலம் வந்ததால் 'பிச்சாடனர்' என்னும் பெயரினை ஏற்றார்.

இக்காலத்தில் தம் கரத்தோடு ஒட்டி நின்ற பிரம்ம கபாலம் காரணமாக 'கபாலமூர்த்தி' எனப் பெயர் பெற்றார்.

இவ்வாறு ஒவ்வொரு கற்பத்திலும் தம்மால் கிள்ளி எறியப்பட்ட பல பிரம்ம சிரசுகளைக் கோர்த்து

Copyrighted material

மாலையாய் அணிவதால் 'கங்காளர்' எனவும் பெயர் பெறுகிறார் எனப் புராணங்கள் கூறுகின்றன.

பைரவர் வழிபாடு

காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கில் அழிபடைத்தாங்கி என்னுமிடத்தில் பைரவருக்கெனத் தனி ஆலயம் உள்ளது. காஞ்சிக்குத் தெற்கில் அமைந்திருப்பது பெருநகர் என்றழைக்கப்படும் பிரம்ம நகரமாகும். இங்கு பிரம்ம தேவன் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டதுடன் தனது சிரத்தைக்கிள்ளிய பைரவ சிவனுக்கும் தனித் திருமுன் அமைத்து வழிபாடு செய்தான். அந்தத் திருவுருவம் தனிச் சிறப்பு உடையதாகும்.

சோழ மண்டலத்தில் (தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்கள்) அநேக ஆலயங்களில் பைரவர் வழிபாடு தனிச்சிறப்புடன் நடைபெறுகிறது. இங்கு வழக்கமாக உள்ள பைரவருடன் அவரின் சிறப்பு வடிவங்களில் ஒன்றான வடுகக் கோலம் தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது.

கலையழகு

1. மகாமண்டபத்தையொட்டி உள்ள அயனின் கலைத் திண்மை மிக்க வடிவம் காண்பதற்கு அரியது. கட்டான உடல் அமைப்புடன் உயிர்க் களைத் ததும்பும் இந்தக் கற்சிலை பெரிய அளவில் உள்ளது. இது சோழர் கால எழிலார்ந்த கலைப் படைப்பாகும்.

நான்முகன்- கலைமகள்- திருக்கண்டியூர்

Copyrighted material

2. இரண்டாவது திருச்சுற்றில் கீழ்ப்புறமாக உள்ள ஆணோடு பெண்ணாகிய பெம்மானின் வடிவம் காண வேண்டிய ஒன்றாகும். அமர்ந்த நிலையில் உருவாக்கப் பட்டுள்ள இவ்வடிவம் மிகச் சிறப்பானதாகும். சிவ பெருமானின் ஊர்தியான காளையும் உட்கார்ந்த நிலையில் உள்ளது. இவ்வடிவம் உத்குடி இருக்கையில் காணப்படுகிறது.

3. விமானத்தில் இரண்டாம் தளத்தில் அரைத் தூண்களுக்கு அடியில் காணப்படும் நுணுக்கமான சிற்பங் களும், ஆடல் வல்லானின் பல்வேறு ஆடல் தோற் றங்களும் குறிப்பிடத்தக்கன வாகும். இவ்வாறான அமைப்பு அக்காலக் கலைப் பாணிகளில் ஒன்று என ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். இவை சைவ-வைணவப் புராண நிகழ்ச்சி களை விளக்குகின்றன.

திருக்கண்டியூர்
அர்த்தநாரீசுவரர்

4. பிரம தேவனின் தலையைக் கொய்த பாவம் நீங்க சிவபெருமான் மேற் கொண்ட தவக்கோல வ்டி வம் கருவறை விமானத்திற் கும், சண்டேசுவரர் திருமுன் னிற்கும் இடையே அழகாக அமைந்துள்ளது.

வழிபாடு - விழாக்கள்

நாள்தோறும் நான்கு காலப் பூசைகள் நடைபெறு கின்றன. சித்திரை மாதத்தில் ஏழூர் திருவிழா நடைபெறுகிறது.

Copyrighted material

(ஏழூர் - திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத் துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி மற்றும் திருநெய்த்தானம்)

வைகாசி விசாகத்தில் பதின்மூன்று நாட்களுக்குப் பெருவிழாவும் நடைபெறுகிறது.

கல்வெட்டுகள்

பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மன், சோழப் பேரரசர்களான முதற் பராந்தக சோழன், உத்தம சோழன், கோப்பரகேசரிவர்மன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகியோரின் பதினொன்று கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. கல்வெட்டுகளில் இத்தல இறைவன் பெயர் 'திருவீரட்டானத்து மகாதேவர்' என்றும், 'திருக்கண்டியூர் உடைய மகாதேவர்' என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

"இயலுமாறு எனக்கு இயம்பு மின்இறை வன்னுமாய்நிறை
செய்கையைக்
கயல்நெடுங்கண்ணி னார்கள்தம்பொலி கண்டியூருறை
வீரட்டன்
புயல்பொழிந்திழி வானுளோர்களுக் காகஅன்றயன்
பொய்ச்சிரம்
அயல்நகவ்வது அரிந்து மற்றதில் ஊணுகந்த அருத்தியே"

- *சம்பந்தர் (3.296.6)*

"- காந்தருவத்
தண்டியூர் போற்றுந் தகைகாசிக்கட் செய்து
கண்டியூர் வாழும் களைகண்ணே"

- அருட்பா

□□□

Copyrighted material

முழுவதும் பூத்துக் கொண்டிருக்கக் கூடியது. இங்கே இம்மலர் இறைவனுக்கு மட்டுமே அணிவிக்கப்படுகிறது. மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது. இந்தச் சாதி மல்லியின் ஒரு பூவை எடுத்து அர்ச்சித்தால் அது 1008 முறை அர்ச்சித்ததற்குச் சமம் என்று சொல்லப்படுகிறது.

தலச்சிறப்பு

சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணத்தில், ''பண்டு தொண்டர் மேல் வந்த கூற்றைக் காய்ந்த சேவடியார் நீடியிருப்பது கடவூராகும்'' எனக் காலனைத் காய்ந்ததைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

திருவிளையாடற் புராணம் இத்தலத்தின் சிறப்புப் பற்றி,

> "கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடி கமலஞ் சாத்திச்
> சிறுவனுக்கு ஆயுள் ஈந்த சேவகப் பெருமான் மேய
> அறைபுனற் பழன மூதூர்..."

எனக் கூறுகிறது.

சிவபெருமான் கூற்றுக்குத் கூற்றாயதைச் சம்பந்தர் நூற்றுப் பதின்மூன்று இடங்களிலும், அப்பர் நூற்று முப்பத்துநான்கு இடங்களிலும், சுந்தரர் இருபத்தாறு இடங்களிலும், மணிவாசகர் ஒன்பது இடங்களிலும் போற்றியுள்ளனர். அப்பர் பெருமான்தான் காலனுக்குக் காலனாயதை அதிக அளவில் பாடியுள்ளார். ஒன்பதாம் திருமுறையில் ஐந்து இடங்களில் இச்செயல் போற்றப்பட்டுள்ளது.

> "வெங்கோற்றம் பதைப்ப உதைத்துங்கனே
> உருட்டிய சேவடியான்"

> "காலனைப் பண்டு ஒருகால் உரப்பிய சேவடியான்"

Copyrighted material

"காலனைத்தான் அலற உழக்கிய சேவடியான்"
எனக் காலனை உதைத்த மலரடிகளை அப்பர் போற்றுகிறார்.

ஏழு கன்னியர், துர்க்கை முதலானோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறடைந்திருக்கிறார்கள். தன் மனைவியின் தாலியை விற்று, இறைத்தொண்டிற்குக் குங்கிலியப் பொதி வாங்கி, அரும்பெரும் திருப்பணியாற்றிய குங்கிலியக் கலய நாயனார் வாழ்ந்த தலமிது. மேலும் திருப்பனந் தாளில் அரசனது சேனையாலும் நிமர்த்த முடியாத இலிங்கத் திருவுரு இவரது அளப்பற்ற அன்பால் நிமிர்ந்தது.

தமிழகத்து அரசர்களிடம் அவர்கள் மகிழும்படி உரைத்துப் பெரும் பொருள் பெற்று, அதைக்கொண்டு சிவாலயங்கள் கட்டுவித்தும், பல்வேறு திருப்பணிகள் செய்தும் தொண்டாற்றிய காரிநாயனார் வாழ்ந்த தலம் திருக்கடவூர்.

இவர்களேயன்றி 'திருக்களிற்றுப்படியார்' அருளிய உய்யவந்த தேவ நாயனாரும் இத்தலத்தில் தோன்றியவரே.

சரபோஜி மன்னர் தஞ்சையை ஆண்ட காலத்தில் இத்தலத்தில் வாழ்ந்தவர் அபிராமி பட்டர் என்பவர். அவர் இங்கு எழுந்தருளியுள்ள அன்னை அபிராமியிடம் பேரன்பு பூண்டவர். ஒரு தை அமாவாசை நாளன்று அபிராமி அன்னையை வணங்க ஆலயம் வந்த தஞ்சை சரபோஜி மன்னரிடம் அமாவாசை நாளைப் பௌர்ணமி என்று இவர் தவறாகக் கூறி விடுகிறார். பின்னர் தம் தவறை உணர்ந்து ''உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்...'' என்று துவங்கி, ''விழிக்கே அருளுண்டு...'' என வரும் பாடலைப் பாடினார். அது எழுபத் தொன்பதாவது பாடல்.

Copyrighted material

அப்பாடலைக் கேட்ட அபிராமி அன்னை எழுந்தருளினாள். பல கோடி நிலவுகள் ஒளி வீசுவதற்கு ஒப்பான தன் 'தாடக்கம்' என்ற திருச்செவித் தோட்டைக் கழற்றி வானகத்தே சுழற்றி விட்டாள். அது வானவீதியில் முழு நிலவு வடிவமாய் ஒளிவீசியது. ஆனந்த வடிவாய் காட்சி அளித்த அம்பிகை பட்டரை நோக்கி, 'வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிறுவினோம்; தொடங்கிய அந்தாதியை தொடர்ந்து முடிப்பாயாக' என ஆணையிட்டு மறைந்தாள். அபிராமி பட்டர் மேற்கொண்டு பாடி நூறு பாடல்களாக அந்தாதியை முடித்தருளினார். இவர் பாடிய அபிராமி அந்தாதிப் பாடல்கள் அன்னையைத் தொழுதற்கேற்ற அருமையான பாசுரங்களாக அமைந்தவை. மேலும் இந்நூல் இறைவி யின் பல்வேறு சிறப்புகளை எளிய நடையில், படிப்போருக்கு இறைவியின்பால் அன்பூற்று பெருகும் வண்ணம் அருளப் பெற்றுள்ளது. இவை பாடப்பெற்ற அற்புதத் தலம் திருக்கடவூராகும்.

புராண வரலாறு

திருக்கடவூருக்கு 2 கி.மீ. தொலைவிலுள்ள மணல் மேடு என்னும் ஊரில் வாழ்ந்து வந்த மிருகண்டு முனிவருக்கு புத்திரப் பேறு இல்லை. மகப்பேறு வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிகிறார். அவர் தவத்திற்கு இரங்கிய இறைவன் அவர் முன் தோன்றி, 'குறைந்த அறிவும், நீண்ட ஆயுளும் கொண்ட மகன் வேண்டுமா அல்லது நற்குணங்களை உடைய பதினாறு வயது வரை வாழும் மகன் வேண்டுமா' என்று கேட்கிறார். முனிவர் 'மகன் குறைந்த ஆயுள் உள்ள வனாக இருந்தாலும் பரவாயில்லை; நிறைந்த அறிவுடையவனாகவே இருத்தல் வேண்டும்' என்கிறார்.

Copyrighted material

மிருகண்டுவின் மகனாய் மார்க்கண்டேயன் பிறக்கிறான். குணசீலனான அவன் பதினாறு வயது நிரம்பும் அளவில் தன் ஆயுளைப் பற்றிய குறையை அறிகிறான். தாய், தந்தையர் அனுமதியோடு கடவூருக்கு வருகிறான். அங்கு கோயில் கொண்டுள்ள அமிர்தகடேசுவரரை வழிபடுகிறான். அவ்வாறு அவன் பூசிக்கும்போது அவனுக்குக் குறித்த பதினாறு வயது நிரம்பியதால் அவனது உயிரைக் கவர காலன் வருகிறான்.

மார்க்கண்டேயன் அச்சம் காரணமாக இலிங்கத் திருவுருவைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறான். மார்க்கண்டேயன் உயிரைக் கவர காலன் இலிங்கத்தையும் சேர்த்து பாசக் கயிற்றை வீசுகிறான். இறைவனுக்குக் கோபம் உண்டாகிறது. இலிங்கத்தினின்று தோன்றிய இறைவன், காலனைத் தனது இடதுகாலால் எட்டி உதைத்து மார்க்கண்டேயன் என்றும் பதினாறாக வாழ அருள் புரிகிறார்.

கோயில் அமைப்பு

மூன்று திருச்சுற்றுகள் கொண்ட ஆலயம் நகரின் நடுவே மேற்கு நோக்கி உள்ளது. அளப்பரிய சிறப்புகளுடன் அருமையாய்த் திகழும் இத்திருக்கோயில் எழுநிலை இராசகோபுரத்துடன் கம்பீரமாகக்

Copyrighted material

காட்சியளிக்கிறது. இராசகோபுரத்தில் பாற்கடலைக் கடைந்த காட்சி, ஆனை உரி போர்த்த தேவர், சம்பந்தரின் சிவிகையை அப்பர் தாங்குவது, சிவபாத இருதயரின் தோளில் சம்பந்தர் முதலிய சிற்பங்கள் காணத்தக்கன.

முதல் திருச்சுற்றில் இடது புறம் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. அதன் கீழ்ப்பால் நந்தவனம் உள்ளது. கிழக்கு கோபுரத்திற்கருகில் திருக்குளம் உள்ளது. இத்திருச்சுற்றிலேயே தென்மேற்கு மூலையில் இரண்டு நிலை கோபுரமும், ஒரு திருச்சுற்றும் கொண்ட அன்னை அபிராமியின் திருமுன் உள்ளது. அம்மன் கருவறைக்கு வடபுறத்தில் சண்டிகேசுவரர் திருமுன் உள்ளது.

அன்னை அபிராமி: 'அபிராமி' பெயரிலும் அழகு; வடிவிலும் அழகு. 'ரம்யம்' என்றால் அழகு; ரம்யத்தை உடையவள் 'ராமி'(அழகுடையவள்); அபி - மேலான; எனவே 'அபிராமி' என்ற சொல்லுக்கு 'மேலான அழ குடையவள்' என்பது பொருள். தன்னையே துதித்து, தன் பெயரையே பெயராக்கிக் கொண்ட அபிராமி பட்டருக்கு அருள் செய்து அதன் வழி உலகுக்கு 'அபிராமி அந்தாதி' கிடைக்கச் செய்த பெருமாட்டி அன்னை அபிராமி ஆகும்.

"தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே"

- அபிராமி அந்தாதி -69

ஐந்து நிலை கோபுரம் அணி செய்யும் இரண்டாம் திருச்சுற்றின் இடதுபுறம் அலங்கார மண்டபமும், ஈசான திசையில் யாகசாலையும் அமைந்துள்ளன.

Copyrighted material

உலோகப் படிமக் கலையில் அடைந்திருந்த சிறப்பான நிலைக்குச் சான்றாக உள்ளது. இது பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலக்கியங்களில் காலனைக் காய்ந்த பெம்மான்

ஊழிக்கால முடிவில் சிவபெருமான் எருமை வாகனத்தைக் கொண்ட காலனின் நெஞ்சைப் பிளந்து அவன் குடலைக் காளிக்கு அளிப்பான் என்று கலித்தொகை குறிப்பிட்டுள்ளது.

"படரணி யந்திப் பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்றெருமை நெஞ்சிடந்திட்டுக்
குடர் களிக் கார்த்து வான் போன்ம்"

என்ற காலனைச் சிவன் கொன்ற கருத்து நிலை வளர்ச்சியே பின்னர் மார்க்கண்டேயனுக்காக காலனைக் காலால் சிவன் தடிந்த புராண வரலாறாக வளர்ச்சி பெற்றிருக்கலாம்.

திருமுறைகளில் காலனைச் சாடிய அருளாடலை அம்மையார் 'கூற்றுருவம் காய்ந்தானை' என்றும், 'காலனையும் வென்றுதைத்த கால்' என்றும் குறித் துள்ளார். 'கரிதரு காலனைச் சாடினாய்' என்றும், 'காலன் மாள்வுறக் காலாற்காய்ந்த கடவுள்' என்றும், 'காலனைக் காய்ந்த வெங்கடவுள்' என்றும் சம்பந்தர் இச்சிவவடி வினைப் போற்றுகிறார். 'காலன் தன் ஆருயிர்தனை வல்லினாய்' என்று சுந்தரரும், 'காலனைக் காய்ந்தவர்', 'காலனைச் சாடிய அழகர்', 'காலனை அஞ்ச உதைத்த வன்' கூற்றங் காய்ந்தவன்', 'அந்தனுக்கந்தகன்', 'காலனையும் காய்ந்த கழலார்' என்று அப்பரும் காலனைக் காய்ந்த இவ்வடிவினைப் போற்றுகின்றனர். மேலும் இவ்வடிவ வரலாற்றை அப்பர்,

Copyrighted material

"சேலின் நேரனைய கண்ணார் திறம்விட்டுச் சிவனுக்கு அன்பாய்ப்
பாலுநல் தயிர் நெய்யோடு பலபல ஆட்டி என்றும்
மாலினைத் தவிர நின்ற மார்க் கண்டர்க்காக அன்று
காலனை உதைப்பர் போலும் கடவூர்வீ ரட்ட னாரே!
- (4.31.9)

என்று விரிவாகக் குறித்துள்ளார்.

பரஞ்சோதியும், பெரும்பற்றப்புலியூராரும் யானை உரித்த சிவன் வடிவையும், காலனையுதைத்த சிவன் வடிவையும் அடுத்தடுத்துக் கூறி ஒன்று போலச் சிறப்பித்துள்ளமை உன்னி உணரத்தக்கதாகும்:

'புதைபடக் கரித்தோல் போர்த்த புண்ணியமூர்த்தி; தாளால்
உதைபடக் கிடந்த கூற்றம்'

என்று இரு தொடர்களில் பரஞ்சோதியார் குறிப்பிட்டுள்ளவாறே, பெரும்பற்றப்புலியூர் நம்பி தம் நூலின்கண்,

'குன்றக் கரியுரித்தோன் கூற்றம் கெட உதைத்தோன்'

என்று ஒரே தொடரில் இவ்விரு வடிவங்களையும் சுட்டியுள்ளார்.

ஞானசம்பந்தர் தம் பதிகங்களுள் காலனைக் காய்ந்த நிகழ்வு திருவெண்காடு, திருக்கடவூர் என்ற இரு திருத்தலங்களில் நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு கருதத்தக்கதாகும்.

'வேலை மலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறைவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை...'

என்று திருவெண்காடு என்னும் பதியில் சுவேதகேது என்னும் மறையவனுக்காகக் காலனைச் சாடிய

Copyrighted material

நிகழ்ச்சியைச் சுட்டியுள்ள சம்பந்தர் திருக்கடவூர் வீரட்டத்தில் மார்க்கண்டேயனுக்காக இறைவன் காலனைத் தடிந்த நிகழ்ச்சியைத் தலப்பதிகத்தில்,

"புரிதரு மாமலர்க்கொன்றை மாலை புனைந்தேத்தவே
கரிதரு காலனைச் சாடினானும் கடவூர் தன்னுள்'

என்று குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

இந்நிகழ்வினை மணிவாசகர்,

"காலன் ஆருயிர் கொண்ட பூங்கழலாய்' (23:9)
'காலனைக் காலால் உதைத்தல் பாடி' (9:8)

'காலாற் காலனைக் காய்ந்த கடுந்தழல்
பிழம்பன்ன மேனிச் செய்யனே' (29:7)

என வரும் தொடர்களால் குறித்துள்ளார்.

காலனைக் காய்ந்த இச்சிவவடிவினைக் கம்பர், 'காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்' *(4-7-12)* என்னும் தொடரால் சுட்டியுள்ளார். காலன் மார்பில் தன் கால்களால் உதைத்த திறத்தினை,

'காலன் மார்பிடைச் சிவன் கழல்பட' (6-29-12)
'எதிர்வரு காலனை ஒரு காலுற
மருமத்து உதைத்தால் என' (6-26-12)

என வரும் தொடர்களால் குறித்துக் காட்டியுள்ளார். இவ்வாறு சிவனின் எண்பெரும் வீரட்ட வடிவங்களில் திரிபுராரி, வீரபத்திரர், கஜாரி, காமாரி, காலாரி முதலான ஐந்து வடிவங்கள் இராமகாதையில் சுட்டப்பெற்றுள்ளன.

'கூற்றினை உதைத்த பாதமும்'
'முந்தி முதல் கூற்றுதைத்த இருதாள்'

Copyrighted material

என வரும் தொடர்களால் மார்க்கண்டேயனுக்காக காலனைக் காலால் உதைத்த சீர்மையை வில்லியார் பேசுகின்றார்.

காலனைக் காய்ந்த பெம்மான் - வடிவ அமைப்பு

"மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தன் உயிர் வாங்கப்
பதைத்தான் என்னா உன்னிவெ குண்டான் பதிமூன்றும்
சிதைத்தான் வாமச் சேவடி தன்னால் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில் போல்மண்
ணுறவீழ்ந்தான்"

- கந்தபுராணம் - 2237

தாமரை இருக்கையில் நின்ற நிலை; வலக்கால் இயல்பாகத் தாமரை இருக்கையில் படிந்திருக்க, இடக்கால் சற்று தூக்கிக் காலனுடைய மார்பில் வைக்கப்பட்டிருக்கும். கோரைப் பற்களுடைய திருமுகம்; சடைமுடி, முக்கண், நான்கு கைகள் அல்லது எட்டுக் கைகள் - இருவித அமைப்பிலும் காணப்படும்.

இவருக்கே சிறப்பிடமான திருக்கடவூரில் உலோகப் படிமமாக உள்ள பெம்மானின் நாற்கைகளில் பின்னிரு கைகளில் பாசமும், அங்குசமும், முன் இடக்கை சூசி முத்திரையிலும், வலக்கையில் சூலம் கீழ் நோக்கிய நிலையிலும் உள்ளன. இடக்கால் தூக்கிய நிலையில் உள்ளது. திருவுருவினைச் சுற்றி திருவாசி உள்ளது. அருள் பொங்கும் திருமுகத்தோடு காட்சி தரும் இறைவனுக்கு இடப்புறம் அன்னையும், வலப்புறம் மார்க்கண்டேயரும் உள்ளனர்.

எட்டுக் கைகளாயின் சூலம், மழு, வச்சிரம், கத்தி இவை வலது கரங்களிலும் அருட் குறிப்பு, கேடயம், உடுக்கை, சுசிக்குறிப்பு இவை இடது கரங்களிலும் அமையப் பெறும்.

Copyrighted material

திருக்கடவூரேயன்றி திருச்செங்காட்டங்குடி (சோணாட்டுத் தலம்)யிலும் இவரது சிலை வடிவம் பொலிவுறக் காணப்படுகிறது. மேலும் கோயில் கோபுரங்கள் பலவற்றிலும் சுதை வடிவிலும், சுவர்களில் ஓவிய வடிவிலும் காணப்படும்.

காமிகாகமத்தின்படி வேறொரு வடிவமும் அமைகிறது. சிவன் இலிங்கத்தினின்று எழுவது போலவும், மார்க்கண்டேயன் வணங்குவது போலவும், காலன் கீழே விழுவது போன்றும் இருக்கும். இது இலிங்கோத்பவர் வடிவினைப் போன்றதாகும்.

இக்கோலம் அடியவர்களுக்காக எதையும் செய்யவல்ல சிவபெருமானது பராக்கிரமத்தை விளக்கிக் காட்டுகிறது. காலனிடமிருந்து நம்மைக் காப்பவராகக் காலகால மூர்த்தி திகழ்கிறார். உலகில் தீய சக்திகளையும், அசுரர்களையும் அழித்துக் காக்கும் பெருமான், அடியவர் ஒருவருக்காக - அதுவும் ஒரு சிறுவனுக்காகக் காலனையே உதைத்தார் எனில் அவரது அளவற்ற கருணையை என்னென்பது! ஆம், மார்க்கண்டேயர் வரலாறு மனித குலத்துக்கே மாண்பைத் தருவது; மன்னா உலகில் மன்னுதல் குறித்து மனிதன் என்ன செய்யவேண்டும் என்பதை முறைப்படி எடுத்து இயம்புகின்றது.

"கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

என்னும் தமிழ்மறை மார்க்கண்டன் வரலாற்றை விளக்க எழுந்த தத்துவம் அன்றோ!

இவ்வரலாற்றைக் கம்பர் மிக அழகாக இராமாயணத்தில் விபீடணன் அடைக்கலப் படலத்தில் வைத்துப் பேசுவதைக் காணுங்கள்:

Copyrighted material

Copyrighted material